# கலைந்த கனவுகள் கி. ராவின் ஜீவன்

# Kalaintha Kanavugal, Kee.Raa vin "Jeevan"

***முனைவர் ந. கார்த்திகாதேவி***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சரஸ்வதி நாராயணன் கல்லூரி*
*மதுரை*

**Dr. N. Karthiga Devi**
*Assistant Professor, Department of Tamil*
*Saraswathi Narayanan College*
*Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*பிறவி ஊமையான அங்குப் பிள்ளைக்குத் திருமணம் நடந்ததா? திருமணம் நடக்காது என்று தெரிந்தவுடன் அங்குப்பிள்ளைத் தேடிக்கொண்ட விபரீத முடிவுதான் கி.ரா.வின் ''ஜீவன்'' ஆகும். அங்குப்பிள்ளை எடுத்த அந்த விபரீத முடிவுக்கு யார் பொறுப்பு என்பதுதான் கட்டுரையின் கேள்வி. பொய் சொன்ன தந்தையைத் தப்பவிட்டுவிட்டு காலத்தின் மேல் பழியைப் போடுவதுடன் கட்டுரை நிறைவடைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:***
*கி. ராஜநாராயணன், ஜீவன், திருமணம், ஊமை, கலைந்த கனவுகள்*

## Abstract

*Angupillai was born dumb. At the appropriate age he yearned for his marriage. He waited for his uncle's daughter very patiently. But he did not understand that uncle and his daughter were myths created by his father to fool him. When he realized his marriage would also be a myth, he annihilates himself. This essay looks for me person responsible for me death of Angupillai. It do not find fault with his father, Instead it fixes blame on the time factor, which controls everybody, but is not controlled by anybody.*

***Keywords**:*
*Kee.Raa, Novel, Jeevan, Physically Challenged, Angupillai*

**Citation**

Karthiga Devi, N. "Kalaintha Kanavugal Kee.Raa vin "Jeevan"." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 1–3.

**முன்னுரை**

*ஆண்டாளின் மங்கலக் கனவு வரிகள் நம்மை மயக்குகின்றன. ஆண்டாள் தன்னுடைய பெருமாளைக் கண்டதில்லை. "வெள்ளை விளிசங்கம் இடங்கையில் கொண்ட விமலன் எனக்கு உருக்காட்டான்" என்று தன்னுடைய குயிற் பத்திலே சொல்லுகின்றாள். ஆனாலும் பெருமாள் மீது அவளுக்கு அபரிதமான காதல். ஆதலால் "மானிடர்க்கென்று பேச்சுப்படின் வாழ்கிலேன்" என்கின்றாள். அவளுடைய கனவு பலித்து ரங்கநாதனை மணம் புரிந்து அவனுடனேயே கலந்து விடுகின்றாள். ஆனால் கி.ராவின் கதாநாயகனான அங்குப்பிள்ளை தனக்குக் கற்பனையாகச் சொல்லப்பட்ட காதலியைக் கரம் பிடிக்க முடியாமல் போன துன்பக் கதைதான் ஜீவன்.*

*ஊமையான அங்குப்பிள்ளையைச் சுற்றி கோபியர் இருந்து கொண்டு "என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ" என்று சீண்டிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அங்குப்பிள்ளை எப்படிப்பட்டவன் என்றால் இந்த இப்பிறவியில் இரு மாதரை என் சிந்தையாலும் தொடேன் என்று சொன்ன ஸ்ரீஇராமச்சந்திரமூர்த்தியைப் போல தனக்கு வீட்டில் பொய்யாகச் செ ால்லப்பட்ட, சாத்தூரில் உள்ள மாமா மகளை நினைத்துக் கொண்டு எந்தப் பெண்ணையும் கிண்டலாகக் கூட தன்னுடன் இணைத்துப் பேச அவன் சம்மதிப்பதில்லை.*

*அங்குப்பிள்ளை சுத்த சைவம்; தான் உயர்ந்த ஜாதி என்ற நினைப்பு வேறு; யார் வீட்டிலும் கை நனைக்கமாட்டான். அவன் பிறந்த வீட்டில் சோறு மட்டும் தான் போடுவார்கள். சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் அவனை வீட்டில் இருக்க விடாமல் விரட்டி விடுவார்கள். ஊர்க்காரர்கள்தான் அவனைத் தங்களுடைய வீட்டுப்பிள்ளை போல் நினைத்து திருவிழாக்களுக்கும் வெளி ஊர்களுக்கும் அழைத்துச் செல்வார்கள். அங்குப்பிள்ளை ஊமையாகப் பிறந்தது அவன் குடும்பத்தினருக்கு கௌரவக் குறைச்சலாகப்பட்டது. ஆனாலும் அங்குப்பிள்ளை தன்னுடைய வீட்டைத்தான் பெரிதாக நேசித்தான்.*

*அங்குப்பிள்ளை ஆண் அழகனும் இல்லை; அறிவாளியும் இல்லை; ஆனால் ஊரில் நடக்கும் அனைத்து விஷயங்களையும் அறிந்து வைத்திருந்தான். தன்னுடைய திருமணத்தைப் பற்றிய கனவுகளுடன் இருந்தான். தன்னுடைய தம்பியான ஆதிலிங்கப்பிள்ளையின் திருமணத்தின் போதுதான் தனக்குத் திருமணம் இல்லை என்றும் தான் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்றும் தெரிந்து கொள்கிறான். அதனால் விரக்தி அடைந்த அங்குப்பிள்ளை,*

"***கொள்ளும் பயன் ஒன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்***
***அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பில் எறிந்து என் அழலைத் தீர்வேனே.***"

***- நாச்சியார் திருமொழி 634***

*என்று ஆண்டாள் சொன்னதைச் செயலிலே செய்து காண்பிப்பவனாய் கொள்ளும் பயன் ஒன்றில்லாத தன்னுடைய ஆணுறுப்பை வெட்டி எறிந்து விடுகின்றான் என்று கி.ரா. கதையை முடிக்கின்றார்.*

"***பொய்மையும் வாய்மை இடத்த***"

*என்று வள்ளுவர் சொன்னதைத் தன் செயல் மூலம் செய்து காட்டியவர் அங்குப்பிள்ளையின் அப்பா. ஆனால் கேட்ட சீதையை மறக்காத இராவணனைப் போல தன் மனத் திருப்திக்காகச் சொல்லப்பட்ட முறைப்பெண்ணை மறக்காமல் ஊமையன் இருப்பான் என்று யாரும்*

*நினைக்கவில்லை. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா (பழமொழி - 95) என்பது போல அங்குப்பிள்ளை இருந்திருக்கின்றான்.*

"***புரை தீர்த்த நன்மை பயக்க வேண்டும்***"

*என்று சொல்லப்பட்ட அந்தப் பொய் அங்குப்பிள்ளையின் உயிரைக் காவு கொண்டு விட்டது. உடல் ஊனம் ஒரு குறை இல்லை. மனம் தான் ஊனம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று மேடைகளிலும் திரைப்படப் பாடல்களிலும் நம்மால் சொல்ல முடிகிறதே தவிர நடைமுறை வாழ்க்கையில் நம்மாள் அதை செயல்படுத்த முடிவதில்லை. அடுத்தத் தலைமுறையை உருவாக்க நாம் அவர்களைத் தகுதியானவர்களாகக் கருதுவதில்லை. கி.ரா.வே ஊமைகளுக்குப் பெரும்பாலும் திருமணம் ஆவதில்லை என்று தன்னுடைய கதையில் குறிப்பிட்டுள்ளார்.*

**முடிவுரை**

*ஊமையாகப் பிறந்தது அங்குப்பிள்ளையின் குற்றமா? ஊமையாகப் பிறந்தால் பசிக்காதா? அந்தந்தப் பருவத்திற்கே உரிய ஆசை, தேடல் வராதா?*

"***பருவம் வந்ததும் ஆசை வந்ததா ?***

***ஆசை வந்ததும் பருவம் வந்ததா ?***" **- கண்ணதாசன்**

*என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, ஊமை என்றாலும் அவனும் மனிதன்தானே? என்று நாம் எப்படிக் கேள்வி கேட்டாலும், நம் வீட்டுப் பெண்ணை ஒரு ஊமைக்கு மணம் முடிக்க நாம் தயாராக இருக்கின்றோமா ?*

"***உன்னைச் சொல்லி குற்றமில்லை***

***என்னைச் சொல்லி குற்றமில்லை***

***காலம் செய்த கோலமடி***

***கடவுள் செய்த குற்றமடி***" **- கண்ணதாசன்**

*என்று நாம் எப்பொழுதும் போல் பழியைத் தூக்கி கடவுள் மேல் போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ள வேண்டியதுதான்.*

**துணைநூற்பட்டியல்**

1. *ஆழ்வார்கள்,நாலாயிரதிவ்வியப்பிரபந்தம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை, அக்டோபர் - 2001*
2. *மாணிக்கவாசகன். ஞா, பழமொழிநானூறு, உமா பதிப்பகம், 18/171, பவளக்காரத்தெரு, சென்னை, மார்ச் - 2007*
3. *ராஜநாராயணன்.கி, மாயமான், காலச்சுவடு, நாகர்கோவில், பிப்ரவரி - 2021*
4. *ராமலிங்கம் பிள்ளை, திருக்குறள், மூலமும் உரையும், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, நேருபவன், புதுதில்லி - 2011*

## References

1. Azhwargal, Nalayira Thiviyaprabandham, Varthamanan Pathipagam, Thiagarayanagar, Chennai, October, 2001.
2. Manikavasagan, G, Palamozhi Nanooru, Uma Pathipagam, 18/171, Pavalakaratheru, Chennai, March 2007.
3. Mayamaan, Kalachuvadu, Nagarkoil, February, 2021.
4. Ramalingam Pillai, Thirukkural, Moolamum Uraiyum, National Book Trust of India, Nehru Bhavan, New Delhi, 2011.